EASTERN UNIVERSITY, SRI LANKA

# 2007 – புதிய கலைத்திட்ட அறிமுகத்தின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் க.பொ.த(சா/த) பரீட்சை அடைவில் ஏற்பட்ட மாற்றம்.

கணபதிப்பிள்ளை ஞானரெத்தினம்

EU / PGS / 2011 / M.Phil (EDU) / 01

இது கல்வியியலில் முதுத்துவமாணிப் பட்டத்தினை நிறைவு செய்யும் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையாகும்.

2014

M.phil02
Thesis
Library - EUSL

கல்வி, பிள்ளை நலத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை.

PROCESSE
Main Library, EU

## உள்ளடக்கம்

பக்கம்

அட்டவணைகளின் பட்டியல் vii

வரைபுகளின் பட்டியல் ix

பின்னிணைப்புக்களின் பட்டியல் x

நன்றியுரை xii

ஆய்வுச் சுருக்கம் xiii

### அத்தியாயம் 1

**அறிமுகம்** **1**

ஆய்வுப் பிரச்சினை 1

க.பொ.த.(சா/த) பரீட்சையின் தேசிய ரீதியான அடைவு 4

ஆய்வுப் பிரதேசம் 6

அறிமுகம் - மட்டக்களப்பு மாவட்டம் 7

மாவட்டத்தில் கல்வி வலயங்களும் பாடசாலைகளும் 7

ஆய்வின் முக்கியத்துவம் 10

க.பொ.த.(சா/த) பரீட்சை அடைவு தொடர்பான முக்கியத்துவம். 10

மாவட்ட மேம்பாடு தொடர்பான முக்கியத்துவம் 11

கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்பான முக்கியத்துவம் 12

கலைத்திட்டம் மறுசீரமைப்பு – 2007 12

ஆய்வு வினா 19

ஆய்வின் நோக்கம் 21

## அத்தியாயம் 2


பக்கம்

**இலக்கிய மீளாய்வு** **22**

அறிமுகம் 22

கல்வி அடைவு 23

கல்வி அடைவுகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 24

கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும்
தத்துவ ரீதியான கருத்துக்கள் 25

ஒன்றிணைந்த காரணிகள் 25

மாணவர் தொடர்பான காரணிகள் 27

முந்திய கல்வித் தகைமை 27

கற்றலுக்கான முன்னுரிமை 28

பாடசாலை வரவு 28

மாணவர் மனப்பாங்கு 28

கற்கும் முறை 29

கற்கும் நேரம் 29

இலட்சியம் வகுத்தல் 29

வீடு தொடர்பான காரணிகள் 29

பாடசாலை தொடர்பான காரணிகள் 31

கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை
வெளிப்படுத்தும் எண்ணக்கருப் படமாதிரிகள் 33

கல்வி அடைவு தொடர்பான அனுபவ ரீதியான ஆய்வுகள் 35

## அத்தியாயம் 3


| | பக்கம் |
|---|---|
| **ஆய்வு முறையியல்** | **56** |
| அறிமுகம் | 56 |
| ஆய்வு வடிவம் | 56 |
| ஆய்வுத் திட்டம் | 57 |
| குடித்தொகை | 58 |
| மாதிரி எடுப்பு | 59 |
| ஆய்வுக் கருவி | 60 |
| தகவல் சேகரிப்பு | 60 |
| பகுப்பாய்வு | 61 |
| ஆய்வின் வரையறை | 62 |

## அத்தியாயம் 4


பக்கம்

**தரவுப் பகுப்பாய்வும் அனுமானங்களும்** **63**

அறிமுகம். 63

க.பொ.த.(உ/த) வகுப்பிற்குத் தகைமை பெற்றவர்களின் சதவீதம். 64

தேசிய ரீதியாக க.பொ.த.(உ/த) வகுப்பிற்குத் தகைமை பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம். 65

மட்டக்களப்பு மாவட்டத்தில் க.பொ.த.(உ/த) வகுப்பிற்குத் தகைமை பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம். 66

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி வலயங்கள் ரீதியாக க.பொ.த.(உ/த) வகுப்பிற்குத் தகைமை பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம். 68

க.பொ.த.(உ/த) வகுப்பிற்குத் தகைமை பெற்றவர்களின் சதவீதங்கள் தொடர்பான இணைவு. 69

2007– புதிய கலைத்திட்ட அறிமுகத்தின் முன்னரும் பின்னரும் க.பொ.த.(உ/த) வகுப்பிற்குத் தகைமை பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாறத்திறன். 70

க.பொ.த.(சா/த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியின்மை பெற்றவர்களின் சதவீதங்கள். 73

தேசிய ரீதியில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியின்மை பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம். 70

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியின்மை பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம். 75

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி வலயங்கள் ரீதியாக அனைத்துப் பாடங்களிலும் சித்தியின்மை பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம். 78

அனைத்துப் பாடங்களிலும் சித்தியின்மை பெற்றவர்களின் சதவீதங்கள் தொடர்பான இணைவு. 77

2007 – புதிய கலைத்திட்ட அறிமுகத்தின் முன்னரும் பின்னரும்அனைத்துப் பாடங்களிலும் சித்தியின்மை பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றத்திறன். 79

கட்டாய பாடங்களின் சித்தி பெற்றவர்களின் சதவீதங்கள். 81

தேசிய ரீதியில் கட்டாய பாடங்களின் சித்தி பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம். 81

2007 – புதிய கலைத்திட்ட அறிமுகத்தின் முன்னரும் பின்னரும் தேசிய ரீதியல் கட்டாய பாடங்களின் சித்திபெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாறத்திறன். 83

மட்டக்களப்பு மாவட்டத்தின்கல்வி வலயங்களில் கட்டாய பாடங்களில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம். 85

கட்டாய பாடங்களின் தேசிய ரீதியான இடைப் பெறுமானத்தில் ஏற்பட்ட மாற்றம். 94

வினாக்கொத்திற்கான துலங்கல்கள் தொடர்பான பகுப்பாய்வு. 97

## அத்தியாயம் 5


பக்கம்

**முடிவுகளும் விதந்துரைகளும்** **99**

அறிமுகம் 99

ஆய்வு முடிவுகள் 101

க.பொ.த.(உ/த) வகுப்பிற்கு தகைமை பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான முடிவுகள். 101

க.பொ.த.(சா/த) பரீட்சையில் அனைத்துப்பாடங்களிலும் சித்தியின்மை பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான முடிவுகள். 102

கட்டாய பாடங்களில் சித்தி பெற்றவர்களின் சதவீதங்களில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான முடிவுகள். 104

கட்டாய பாடங்களில் தேசிய ரீதியான இடையில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான முடிவுகள். 105

வினாக்கொத்தின் துலங்கல் தொடர்பான பகுப்பாய்வு முடிவுகள். 106

ஆய்வு முடிவுகளின் தொகுப்பு 107

# ஆய்வுச் சுருக்கம்

எமது நாட்டில் முறைசார் கல்வியில் மூன்று தேசிய பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.(சா/த) பரீட்சை, க.பொ.த.(உ/த) பரீட்சை என்பனவே அவையாகும். க.பொ.த.(உ/த) வகுப்பிற்கு தகைமை பெறுதல், தொழினுட்ப கல்லூரிக்கு அனுமதி பெறல், சிறிய தொழில்வாய்ப்புக்கள் பெறல் என்பனவற்றிற்கு க.பொ.த.(சா/த) பரீட்சையின் அடைவு மிக முக்கியமானதாகும். ஆயினும் க.பொ.த.(சா/த) பரீட்சை அடைவுகள் திருப்திகரமான நிலையில் இல்லை என்பதனைப் பரீட்சைத் திணைக்களப் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

பரீட்சை அடைவுகளை மேம்படுத்தல் உட்பட மாணவர்களின் திறன்களை விருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டு 2007 ஆம் ஆண்டு புதிய கலைத்திட்டம் தேசிய ரீதியில் அறிமுகஞ் செய்யப்பட்டது. இக்கலைத்திட்ட மாற்றத்திற்கு அமைவாக 2008 ஆம் ஆண்டு முதல் தடவையாக க.பொ.த.(சா/த) பரீட்சை நடாத்தப்பட்டது. இதுவரையில் 2013ஆம் ஆண்டு வரை ஆறு வருடங்கள் இப்பரீட்சை நடைபெற்று முடிந்துள்ளது. இக்கலைத்திட்டமானது க.பொ.த.(சா/த) பரீட்சை அடைவில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை ஆராயவேண்டியது கல்வியாளர்களின் கடமையாகும். இதன் காரணமாக இவ் ஆய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. மட்டக்களப்பு மாவட்டம் ஆய்வுப் பிரதேசமாகக் கருதப்பட்டு அளவை ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பரீட்சை அடைவில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆயினும் இவ் ஆய்வில் நான்கு விடயங்கள் மாத்திரமே ஆராயப்பட்டுள்ளன. க.பொ.த.(உ/த) வகுப்பிற்கு தகைமை பெற்றவர்களின் சதவீதங்கள், க.பொ.த.(சா/த) பரீட்சையில் அனைத்துப்பாடங்களிலும் சித்தியின்மை பெற்றவர்களின் சதவீதங்கள், கட்டாய பாடங்களில் சித்தியின்மை பெற்றவர்களின் சதவீதங்கள், கட்டாயப் பாடங்களின் இடை என்பனவே அந்நான்கு விடயங்களுமாகும். இங்கு கட்டாய பாடங்களாக தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம் ஆகிய ஐந்து பாடங்களும் கருதப்பட்டுள்ளன

அளவுசார் தரவுகளும், பண்புசார் தரவுகளும் இவ் ஆய்வில் பயன்படுத்தப்பட்டன. பரீட்சை திணைக்களத்தில் இருந்தும் கல்வி வலயங்களில் இருந்தும் பெறப்பட்ட க.பொ.த.(சா/த) பரீட்சை அடைவுகள் அளவுசார் தரவுகளாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி வலயங்களில் கடமையாற்றும் உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், சிரேஷ்ட ஆசிரியர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள் பண்புசார் தரவுகளாகக் கருதப்பட்டுள்ளன. இத்தகவல்களைப் பெறுவதற்காக ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வினாக்கொத்து கல்முனை பிரதேச ஆசிரியர்களுக்கு முற்சோதனையாக நடாத்தப்பட்டு திருத்தம் செய்யப்பட்டதாகும்.

தரவுகள் யாவும் SPSS Software மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. நூற்று வீதம், இடை, இணைவுக்குணகம், t – test ஆகிய புள்ளிவிபர நுட்பமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொருத்தமான இடங்களில் புள்ளி வரைபுகளும், சலாகை வரைபுகளும் காட்டப்பட்டுள்ளன.

பகுப்பாய்வு மூலம் இப்புதிய கலைத்திட்டமானது க.பொ.த.(சா/த) பரீட்சை அடைவில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளமை அறியப்பட்டுள்ளது. க.பொ.த.(உ/த) வகுப்பிற்குத் தகைமை பெற்றவர்களின் சதவீதங்கள் அதிகரித்துள்ளமையும், அனைத்துப் பாடங்களிலும் சித்தியின்மை பெற்றவர்களின் சதவீதங்கள் குறைவடைந்துள்ளமையும் அறியப்பட்ட முக்கிய மாற்றங்களாகும். இந்த மாற்றங்கள் தேசிய ரீதியிலும் மட்டக்களப்பு மாவட்ட ரீதியிலும் கல்வி வலயங்கள் ரீதியிலும் இணைந்து செல்வதும் அவதானிக்கப்பட்டுள்ளது. கட்டாய பாடங்களில் தமிழ்மொழிப் பாடத்தின் சித்தி வீதமானது குறைவடைந்து வருவதும் ஏனைய பாடங்களின் சித்தி வீதங்கள் அதிகரித்துச் செல்வதும் அறியப்பட்ட மற்றொரு விடயமாகும். அதேவேளை கட்டாய பாடங்களின் இடைப் பெறுமானம் கலைத்திட்ட அறிமுகத்தின் பின்னர் குறைவடைந்து செல்வதனையும் இவ் ஆய்வு எடுத்துக்காட்டியுள்ளது.

பொதுவாக கலைத்திட்ட அறிமுகத்தின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் க.பொ.த.(சா/த) பரீட்சை அடைவு அதிகரித்துள்ளமை இறுதி முடிவாகப் பெறப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்களுள் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் கருதப்பட்ட அனைத்து விடயங்களிலும் உயர்வான நிலையைக் காட்டுகின்றது. இது தேசிய நிலையையும் மிஞ்சுவதாகவும் உள்ளது. இவற்றிற்கு மேலாக க.பொ.த.(சா/த) பரீட்சை அடைவை மேம்படுத்துவதற்கான பல ஆலோசனைகளும் இவ் ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ளன.